**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 91/2019**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 26.11.2025 | | |
| பெயர்: | ஞானகுணாலன் (PW– 1 Cross ) | தகப்பனார் பெயர்: | அகோரம் |
| கிராமம்: | வாணகிரி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 65/2025 |

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 26.11.2025**

**(ஆரம்பித்த நேரம்– 12.41)**

1. எனது தகப்பனார் அகோரம் கடந்த 1960ல் இறந்துவிட்டார். அவருடைய இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு கிராம நிர்வாக அலுவலகம் வாணகிரி கிராமம். வழக்கிற்கு முன்பு நான் 1,3,4 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு 1ம் பிரதிவாதிக்கு கிடைக்கவில்லை, அதனால்தான் அஞ்சலக ஒப்புதல் அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவருக்கு அறிவிப்பு கிடைத்திருந்தால் அவர் பதில் கூறியிருப்பார் என்றால் சரியல்ல.

2. எனது தகப்பனாருக்கு ராமலிங்கம், செல்லப்பன், அண்ணாதுரை மற்றும் நான் ஆகிய 4 மகன்கள் என்றால் சரிதான். பெரியநாயகி, பாரதி என்ற இரு மகள்கள் என்றால் சரிதான். செல்லப்பன் மற்றும் பெரியநாயகி ஆகியோர் இறந்துவிட்டனர் என்றால் சரிதான். செல்லப்பனின் மகள் கிருஷ்ணவள்ளி. பெரியநாயகிக்கு தமிழரசி, மல்லிகேஷ்வரி, ஷீலா, அம்பிகா, விஜி ஆகிய 5 மகள்களும், பக்கிரிசாமி, கார்த்திகேயன் என்ற 2 மகன்களும் உண்டு.

3. அண்ணாதுரை காணாமல் போய்விட்டதால்தான் அவருக்கு நானும் வாரிசு

என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் செல்லப்பனின் மகள் கிருஷ்ணவள்ளியும், பெரியநாயகியின் மகன்கள் மற்றும் மகள்கள் அண்ணாதுரையின் வாரிசுகளாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். செல்லப்பனின் மகள் கிருஷ்ணவள்ளியும், பெரியநாயகியின் மகன்கள் மற்றும் மகள்கள் ஆகியோர்களை நான் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் மேற்படியார்களை வாரிசு என்று கூறிவிட்டு இந்த வழக்கில் அவர்களை தரப்பினர்களாக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

4. 19.11.1959ல் எனது தகப்பனார் குடும்ப சொத்துக்களை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் நான் கேட்டு தெரிந்து கொண்டேன். அந்த ஆவணம் எழுதும்போது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.198/2017 வழக்கில் முறையாக விசாரணை நடைபெற்றுதான் தீர்ப்பாணை செய்யப்பட்டுள்ளது என்பதால் அது செல்லாது என்று நான் பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல.

5. அ.வ.எண்.198/2017 வழக்கு தாக்கல் செய்யும்போது எனக்கு தெரியும் என்றாலும், தெரிந்துகொண்டே தெரியாது என நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அண்ணாதுரைக்கு சொத்து இருப்பதால் நான் அவருக்கு வாரிசு என்று வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த சொத்தில் தான் நான் குடியிருந்து வருகிறேன். மேற்படி சொத்து விபரத்தை நான் கூறவில்லை என்றால் சரிதான்.

6. அண்ணாதுரை சொத்தை பொறுத்து எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>3,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

**(முடிவு நேரம்– 13.00)**